# மீண்டுமொரு கலவரத்துக்குத் தூபமிடும் இனவாத அமைப்புக்களை தடை செய்க!

## அரசுக்கு சந்திரிகா வலியுறுத்தல்

கறுப்பு ஜூலையில் கொல்லப்பட்டவர்களுக்காகக் கொழும்பில் நினைவேந்தலைக் கடைப்பிடிக்கவிடாமல் தடுத்தமையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்குப் பொலிஸார் துணைபோனமையும் கண்டனத்துக்குரியது, என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பொரளையில் நேற்றுமுன்தினம் இடம்பெறவிருந்த நினைவேந்தல் நிகழ்வை சிங்கள ராவய, பொலிஸார் - இராணுவத்தினர் இணைந்து குழப்பியிருந்தனர்.

இது தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சந்திரிகா, கறுப்பு ஜூலை கலவரமொன்று மீண்டும் நாட்டில் இடம்பெறக்கூடாது என்பதுதான் ஜனநாயகத்தை விரும்பும் அனைவரினதும் பிரார்த்தனையாகும். அந்தச் சம்பவம் எதனால் இடம்பெற்றது என்பது தொடர்பில் விளக்கமளிக்கவேண்டிய அவசியமில்லை.

அந்தக் கலவரத்தில் உயிரிழந்தவர்களைக் கொழும்பில் நினைவேந்த முற்பட்டமையைத் தடுத்து நிறுத்தியமை கண்டிக்கத்தக்கது. அங்கு பொலிஸார் நடந்துகொண்ட விதமும் கண்டனத்துக்குரியது.

மக்கள் தம் நினைவேந்தல் உரிமையின் பிரகாரம் உயிரிழந்தவர்களை நினைவேந்தியபோதும் அதை இனவாதநோக்குடன் பார்த்த அந்த இனவாத அமைப்பையும் நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.



மீண்டும் ஒரு கலவரத்துக்குத் தூபமிடும் இத்தகைய இனவாத அமைப்புக்கள் உடனடியாகத் தடை செய்யப்பட வேண்டும், என்று வலியுறுத்தியிருக்கிறார்.

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 09 செவ்வாய்க்கிழமை 25.07.2023 கதிர் 36

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

## மீளவும் இரத்தக்களரியை ஏற்படுத்த விரும்புகின்றாரா, கஜேந்திரகுமார்?

### சரத் வீரசேகர எம்.பி. கேள்வி

தனிநாடு கோரி நாட்டில் மீண்டும் குருதிக்களரியை ஏற்படுத்தவா கஜேந்திரகுமார் முயல்கின்றார்? என்று கேள்வி எழுப்பியுள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர.

தமிழர்கள் ஒற்றையாட்சியைக் கோருகின்றார்களா? சமஷ்டியாட்சி கோருகின்றார்களா? தனி நாட்டைக் கோருகின்றார்களா? என்பதை அறிய, துணிவு இருந்தால் சர்வஜன வாக்



கெடுப்பு நடத்துங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர்

2➤

## நினைவேந்தல் நிகழ்வுகளால் உயிரிழந்தவர்களை தட்டி எழுப்ப முடியாது – விமல், கம்மன்பில கருத்து

நினைவேந்தல் நிகழ்வுகளால் உயிரிழந்தவர்களைத் தட்டி எழுப்ப முடியாது. எனவே, இன நல்லிணக்கத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் நினைவேந்தல்களை நிறுத்துமாறு உரிய தரப்பினரிடம் கேட்டுக்கொள்கின்றோம், என்று நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் கறுப்பு ஜூலை நினைவேந்தல் குழப்பியடிக்கப்பட்டமை தொடர்பிலேயே அவர்கள் மேற்கண்டவாறு கூறியுள்ளனர்.



ஜூலையில் குருதிக்களரியை ஏற்படுத்தியது விடுதலைப்புலிகள்தான். வடக்கில் படையினர் மீது புலிகள் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதல்தான்

2➤

## பூரண கதவடைப்புப் போராட்டத்திற்கு யாழ் பல்கலை மாணவர்கள் ஆதரவு



வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முழுமையான கதவடைப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்தப் போராட்டத்திற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முழுமையான ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்துள்ளது.

2➤

## ராஜபக்சக்களுக்கு கூண்டோடு ‘வெட்டு’!

ராஜபக்ச வித்தியாலயம் ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வில் ராஜபக்சக்கள் எவரும் அழைக்கப்படவில்லை என்று செய்தி வெளியாகியுள்ளது.

மாத்தறை மஹிந்த ராஜபக்ச வித்தியாலயத்தில் கடந்த வாரம் பரிசளிப்பு விழா இடம்பெற்றது. ஆனால், ராஜபக்ச சகோதரர்கள் யாரும் அந்த நிகழ்வுக்கு அழைக்கப்படவில்லை. கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, டலஸ் அழகப்பெரும எம்.பி. ஆகியோர் மாத்திரமே அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்தப் பாடசாலையின் தற்போதைய அதிபராக இருப்பவர் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. ஒருவரின் உறவினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## “போடா!” எனக் கூறிய பிள்ளையான் ஆவேசம் கொண்ட சாணக்கியன்!

மட்டக்களப்புப் பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் இன்றைய தினம் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

மக்கள் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடப்பட்டுக் கொண்டிருந்தபோது காணொளி ஒன்றை காட்சிப்படுத்த தமிழரசுக் கட்சி நாடாளமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் அனுமதி

2➤

## அமைச்சுப் பதவி கேட்டுப் போராடும் ‘மொட்டு’ எம்.பிக்கள் மக்களின் விமர்சிப்பை மீறமுடியாது! – ஜனாதிபதி பதில்

மக்கள் மத்தியில் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ள மொட்டுக் கட்சி எம்.பிக்களுக்கு மீண்டும் அமைச்சுப் பதவிகளை வழங்கி நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த விரும்பவில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பிரதிநிதி ஒருவரிடம் தெரிவித்துள்ளார் என்று தெற்கு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானது முதல் மொட்டுக் கட்சி எம்பிக்கள் பத்துப்பேர் அமைச்சுப் பதவிகள் கேட்டுப் போராடி வருகின்றனர். இதனால் கடும் அதிருப்தியில் இருக்கும் அந்த பத்துப்பேரும் ஒரு வருடத்தைக் கடந்த போதிலும், அமைச்சுப் பதவிகளுக்கான போராட்டத்தை இன்னும் கைவிடவில்லை.

கடந்த வாரம் அந்த பத்துப்பேரில் ஒருவரான நாமல் ராஜபக்ச, ஜனாதிபதி ரணில்

2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# வரி செலுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளக்கூடாது வடக்கு ஆளுநர் திருமதி சார்ள்ஸ் எடுத்துரைப்பு



அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற சேவைகளை சீராக்க கொண்டுசெல்ல வேண்டும் என்றால் மக்கள் வரி செலுத்துவதை தவிர்த்துக் கொள்ளக்கூடாது என வலியுறுத்தியுள்ள வடக்கின் ஆளுநர் திருமதி சார்ள்ஸ், வரியை சரியான வழிமுறையில் செலுத்துவதற்கு நாங்கள் ஒவ்வொருவரும் முன்வரவேண்டும் வேண்டும் என்றும் கோரிக்கைவிடுத்துள்ளார்.

வரிக்கொள்கை மற்றும் ஜனமெப் நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தும் வகையில், ஒன்றிணைந்த நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்ற நிகழ்வு யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் இன்றையதினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் நலன் கருதியதானஇந்த நோக்கத்தை மக்கள் சரியாக புரிந்து கொள்ளவேண்டும் என்பதும் இங்கே மிக முக்கியமான ஒரு விடயமாக இருக்கின்றது. தற்போது அதிகமானோர் யாழ்ப்பாணத்திலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் இருக்கின்றார்கள்.

புலம்பெயர்ந்தவர்களாக இருக்கின்றவர்களுக்கு தெரியும், உலக நாடுகளில் எவ்விதமாக இந்த வரி அறவீடு செய்யப்படுகின்றது என்று. அதுமட்டுமல்லாது குறித்த வரி, அந்நாடுகளின் வருமானத்தில் எத்தகைய பெரும் பகுதியாக காணப்படுகின்றது என்றும் உணர்ந்துகொள்ள முடியும்.

பல பேர் அந்த வரியில் இருந்து தப்பித்துக்கொள்வதற்கும் சில நடைமுறைகளைக் கையாளுகினறனர்.

நாங்கள் இந்த நாட்டின் குடிமக்கள் என்ற ரீதியிலும் இந்த நாட்டிலே பல சேவைகளை நாங்கள் பெற்றுக் கொள்கின்றவர்கள் என்ற ரீதியிலும் எங்களுக்கு ஒரு பொறுப்பு இருக்கின்றது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அத்துடன் நாங்களும் இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பவர்களாக இருக்க வேண்டும்.

இதேநேரம், வருமான வரி செலுத்துகின்றவர்களின் தொகை இந்த நாட் டின் மொத்தக் குடித்தொகையில் மிகவும் குறைவான ஒரு தொகையாகத் தான் இருக்கின்றது. அந்த வகையிலே நாட்டினுடைய வருமான வரியைத் திருத்த வேண்டிய ஒரு தேவை எமது நாட்டிற்கு அவசியமானதாக இருக்கின்றது.

அதனால், இந்த வரிக் கொள்கையில் நாங்கள் இணைந்து நாட்டின் வளர்ச்சிக்கு பங்காளர்களாக வேண்டும், என்றும் வடக்கின் ஆளுநர் திருமதி சார்ளஸ் தெரிவித்துள்ளார்.

## பூரண கதவடைப்புப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போ-தே யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் அழகராசா விஜயகுமார் இதனைத் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணியில்கூட இலங்கைப் பொலிஸார் மட்டுமே காணப்படுகின்றனர் என சுட்டிக்காட்டிய அவர், சர்வதேச அமைப்புகளின் கண்காணிப்பு இன்றியே அகழ்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த அரசு தமிழருக்கு தொடர்ந்தும் அநீதியை இழைத்துக் கொண்டிருக்கின்றது எனவும் கூறினார்.

சுதந்திரமாக நினைவேந்தல்களைக்கூட மேற்கொள்ள முடியாது இருப்பதாகத் தெரிவித்த அவர், தமிழ் மக்களின் பிரச்சனையை வெளியுலகத்திற்குத் தெரியப்படுத்தாது தங்களுக்குள்ளேயே மறைத்து கொண்டிருக்கின்றது இந்த அரசு என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு வெளிப்படையான தீர்வினைப் பெற வேண்டும். சரணடைந்த, காணாமலாக்கப்பட்ட உறுவுகளுக்கு நீதி வேண்டும். அனைத்து மக்களுக்கும் கட்சி பேதமின்றி தமிழ்த் தேசிய பாதையில் பயணிக்கும் அனைத்து கட்சிகளும் இதற்கு ஆதரவினை வழங்கவேண்டும், என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் அழைப்பில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பூரண கதவடைப்புப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதோடு, அன்றைய தினம் வட்டுவாகல் பாலத்தில் ஆரம்பித்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தை நோக்கி பேரணியொன்றும் மேற்கொள்ளப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மூவரடங்கிய மேல்முறையீட்டு மன்றில் டயானா கமகேவின் வழக்கு விசாரணை




டயானா கமகேவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நீக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு எதிர்வரும் செப்டெம்பர் 14ஆம் திகதி மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான தீர்ப்பு இன்று அறிவிக்கப்படவிருந்த போதிலும், இந்த வழக்கு செப்டம்பர் 14 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் 3 நீதியரசர்கள் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வரும் என நீதியரசர்கள் அறிவித்தனர்.

டயானா கமகேவை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யுமாறு கோரி, சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

அவர் பிரித்தானிய பிரஜாவுரிமையையும் கொண்டிருப்பதால் இராஜதந்திர கடவுச்சீட்டை வழங்குவது குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்திற்கு எதிரானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (க)

## நினைவேந்தல் நிகழ்வுகளால் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெற்கில் மோதலாக வெடித்தது. அந்தச் சம்பவத்தை மறக்க வேண்டிய நிலையிலிருக்க வேண்டிய நாம் மீண்டும் அதை நினைவுபடுத்தும் வகையில், ஒரு குழப்பத்தை விரும்பும் வகையில் நினைவேந்தல் என்ற பெயரில் கலவரத்தை ஏற்படுத்த முனைவதை ஏற்க முடியாது.

கொழும்பு நினைவேந்தலை வேண்டுமென்றே ஏற்பாடு செய்துள்ளனர். இவர்கள் புலம்பெயர் தமிழர்களின் நிதி உதவியுடன் இயங்குபவர்கள். உயிரிழந்த புலிகளையும் (முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்) நினைவேந்தும் இந்தக் குழுதான் நேற்றுமுன்தினம் அந்த நிகழ்வையும் நடத்தியது. இதுதான் எமது மக்களின் ஆத்திரத்துக்குக் காரணம்.

இப்படியான நினைவேந்தல் கொழும்பில் தேவையற்றது. வேண்டும் என்றால் அதை வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்கள் நடத்தட்டும்.

அமைதியான தலைநகர் கொழும்பை குருதி ஆறு ஓடும் பூமியாக மாற்ற முயலும் தரப்பினர் நாட்டின் இன ஒற்றுமை கருதிச் செயற்பட வேண்டும், என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## மீளவும் இரத்தக்களரியை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றத்தில் சவால் விடுத்திருந்தார். இது தொடர்பாக ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே சரத் வீரசேகர எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இந்தக் கருத்தை முன்வைக்கும் கஜேந்திரகுமார் எந்த நாட்டிலிருந்து கூறுகின்றார் என்பதை முதலில் உணர்ந்துகொள்ளவேண்டும். தனிநாடு கோரிய விடுதலைப்புலிகளுக்கு இறுதியில் என்ன நடந்தது என்பது அவருக்குத் தெரியும்.

விடுதலைப்புலிகளின் இந்த அபரிமித ஆசையால் தான் பெருமளவான அப்பாவித் தமிழ் மக்கள் உயிரிழக்கவேண்டி வந்தது.

மீண்டும் தனி நாடு கோரி குருதிக்களரியை ஏற்படுத்த கஜேந்திரகுமார் விரும்புகின்றாரா? இது ஒற்றையாட்சியுள்ள பௌத்த - சிங்கள நாடு. இங்கு சமஷ்டிக்கோ, தனிநாட்டுக்கோ இடமில்லை, என்றும் அவர் உறுதிபடக் கூறியிருக்கிறார்.

## “போடா!” எனக் கூறிய பிள்ளையான் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரியுள்ளார்.

எனினும் அதற்கு அனுமதி வழங்க முடியாது என இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தடுத்து நிறுத்தியிருந்தார். இதன் காரணமாக பிள்ளையானுக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது பிள்ளையான், சாணக்கியனை “போடா” எனக் கூறியதையடுத்து, ஆவேசமடைந்த சாணக்கியன் பிள்ளையானுடன் தர்க்கத்தில் ஈடுபட்டிருந்தார் என்று தெரியவந்துள்ளது. (க)

## அமைச்சுப் பதவி கேட்டுப் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கவின் பிரதிநிதி ஒருவரைச் சந்தித்து அமைச்சுப் பதவிகளைப் பெறுவதற்கான போராட்டத்தைத் தாம் கைவிடவில்லை என்றும், தமக்கு அமைச்சுப் பதவிகள் வழங்காவிட்டால் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கமாட்டோம் என்றும் கூறினார்.

இந்தத் தகவல் குறித்த பிரதிநிதியால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் எத்திவைக்கப்பட்டது.

மக்கள் மத்தியில் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ள அவர்களுக்கு மீண்டும் அமைச்சுப் பதவிகளைக் கொடுத்து நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த விரும்பவில்லை, என்று தனது பிரதிநிதியிடம் ஜனாதிபதி பதலளித்தார் - என்று அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புத்தளம் தொழிற்சாலையொன்றில் திடீர் தீ விபத்து – 50 இலட்சம் சேதம்

புத்தளம் மதுரகம பிரதேசத்தில் உள்ள தென்னை நார் தொழிற்சாலையொன்றில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த தீ விபத்து காற்றினால் பரவிய தீப்பொறியிலிருந்து ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த விபத்தில் 50 இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான பொருள் சேதம் ஏற்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# தம்பிலுவில் சமுர்த்தி வங்கி வாடிக்கையாளர்களுக்கு சிறுதொழில் முயற்சி வாழ்வாதாரக் கடன் வழங்கல்



(எம்.எப்.நவாஸ்)

திருக்கோவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தம்பி லுவில் சமுர்த்தி வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு சிறுதொழில் முயற்சிக்கானவாழ்வாதார கடன் வழங்கும் நிகழ்வானது வங்கி முகாமையாளர் எஸ்.எஸ்.சதிஷ் தலைமையில் இன்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் கலந்துகொண்டு, தெரிவு செய்யப்பட்ட பயனாளி ஒருவருக்கு பத்து லட்சம் ரூபா கடனுக்கான காசோலையை வழங்கி வைத்தார்.

திருக்கோவில் பிரதேச செயலகத்தின் சமுர்த்தி தலை மைப்பீட முகாமையாளர் வீ.அரசரெட்ணம், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் பீ.கமலேஸ்வரன், கருத் திட்ட முகாமையாளர் எஸ்.பி.சீலன் மற்றும் வங்கி உத்தியோத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

## அம்பாறை மாவட்டத்தில் மொழியுரிமைப் பிரசாரம்



(நூருல் ஹுதா உமர்)

மனித அபிவிருத்தி தாபனத்தால் அம்பாறை மாவட்டத்தில் சகவாழ்வு சங்கங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தும் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டு செயற்றிட்டத்தின் ஒரு செயற்பாடாக மொழியுரிமைப் பிரசாரத்தினை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

மாவட்டத்திலுள்ள அரச, தனியார் காரியாலயங்கள், பொது இடங்கள் போன்றவற்றுக்கு நேரடியாக சென்று துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தும், பதாதைகளைக் காட்சிப்படுத்தியும் இந்த விழிப்புணர்வுப் பிரசாரம் செய்யப்படுகின்றது.

மனித அபிவிருத்தி தபான உதவி இணைப்பாளர் எம். ஐ. றியால் தலைமையில் நடைபெற்ற இப்பிரசார நிகழ்வில், சகவாழ்வுச் சங்கங்களின் பிரதிநிதிகளாக எம்.ரிலீபா பேகம், பி.மனோரஞ்சினி, எஸ்.தங்கராணி, இசட்.எம்.நஸ்கான் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

## இன்றுமுதல் திருக்கோவில் ஆலயப் பிரதேசம் போதைப்பொருளற்ற வலயமாக பிரகடனம்



( வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவம் தொடர்பான ஒருங்கிணைப்புக் கூட்டம் நேற்று திங்கட்கிழமை திருக்கோவில் பிரதேச செயலாளர் ரி.கஜேந்திரன் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது, இன்று முதல் தீர்த்தம் வரை ஆலய புனிதபிரதேசம் போதைப்பொருளற்ற வலயமாக பிரகடனம் செய்யப்படுவதாகவும், மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் உதவிப் பிரதேச செயலாளர் கந்தவனம் சதிசேகரன், சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ். மோகனகாந்தன், ஆலய பரிபாலன சபை தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ், வண்ணக்கர் வ.ஜயந்தன், உள்ளிட்ட பரிபாலன சபையினரும் திணைக்கள தலைவர்களும் அதிகாரிகளுமாகப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த உற்சவம் எதிர்வரும் 30 ஆம் தேதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 18 நாட்கள் திருவிழாக்கள் நடைபெற்று, ஒகஸ்ட் மாதம் 16 ஆம் தேதி ஆடியமாவாசைத் தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய இருப்பது குறிப்பிடத்தக்கது.



# இளம் பருவநிலை ஆர்வலர் கிரேட்டா துன்பெர்க்கை குண்டுக்கட்டாக வெளியேற்றிய சுவீடன் காவல்துறை



பேரணி மூலம் போக்குவரத்திற்கு முடக்கத்தை ஏற்படுத்தியதாக கூறி சுவீடனைச் சேர்ந்த இளம் பருவ நிலை ஆர்வலர் கிரேட்டா துன்பெர்க்கை போராட்டக் களத்தில் இருந்து காவலர்கள் வலுக்கட்டாயமாக வெளி யேற்றியுள்ளனர்.

கடந்த மாதம் மால்மோ துறைமுகத்துக்கருகே நடந்த பேரணியில் காவல்துறையின் உத்தரவை மீறியதற்காக பருவநிலை ஆர்வலர் கிரேட்டா துன்பெர்க் நேற்று நீதி மன்றத்தால் கண்டிக்கப்பட்டார். சட்ட அமலாக்கத்திற்கு கீழ்ப்படியாதது மற்றும் பொது இடத்தில் போக்குவரத்து முடக்கத்திற்கு காரணமாக இருந்ததாக குற்றம் சாட்டிய நீதிமன்றம், அவருக்கு அபராதமும் விதித்தது.

அதன் பிறகு நீதிமன்றத்துக்கு வெளியே ஊடகங்க-ளிடம் பேசிய கிரேட்டா, காவல்துறை உத்தரவை மீறி யதை ஒப்புக்கொண்டார். ஆனால், தேவை ஏற்பட்டால் விதிகளை மீறும் சூழல் உருவாகியதாகவும் அவர் விளக்கம் அளித்தார். நீதிமன்ற அபராதத்தை உடனே செலுத்தாத நிலையில், நேற்று மால்மோ நகரில் நடை பெற்ற புகைவடிவ எரிபொருட்களுக்கு எதிரான மற்றொரு போராட்டத்திலும் அவர் பங்கேற்றார். இதையடுத்து போராட்டக்களத்திற்கு விரைந்த காவல் துறையினர் அவரை வலுக்கட்டாயமாக அங்கிருந்து வெளியேற்றி னர்.

தண்டனைக்குப் பின்பும் மால்மோ துறைமுகத்திற்கு சென்று போராட்டம் மூலம் போக்குவரத்து முடக்கத்தை ஏற்படுத்தியதால் கிரேட்டாவையும் ஏனைய சூழலியல் ஆர்வலர்களையும் வெளியேற்றியதாக காவல் துறை யினர் தெரிவித்துள்ளனர்.

காவல் நிலையத்தில் அவர்களிடம் விசாரணை நடைபெற்று வருகிறது. சுவீடன் பாராளுமன்றத்திற்கு முன்பாக நடத்திய போராட்டங்களுக்குப் பின் உலகெங்கும் உள்ள பருவநிலை ஆர்வலர்களின் முகமாக 20 வயது கிரேட்டா துன்பெர்க் மாறி இருப்பது குறிப்பிடத்தக்கது.

## உள்நாட்டு இராணுவப் பிரிவுகள் மோதல் சூடானில் 2 கோடிப் பேர் பட்டினியில்!



சூடானில் சுமார் 2 கோடிப் பேர் உணவு இல்லாமல் தவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட் டுள்ளதாக தகவல் ஐ.நா. வின் வெளியாகி யுள்ளது.

ஆப்கானிஸ்தான், எத்தியோப்பியா, தெற்கு சூடான், சிரியா, ஏமன் ஆகிய நாடுகளில் உணவுப் பஞ்சம் மிகவும் தீவிரமான நிலை யில் இருக்கிறது. குடிமக்களுக்கு உணவு, தண்ணீர் உள்ளிட்ட அடிப்படை மனிதநேய உதவிகள்கூட மறுக்கப்படுகின்றன.

இதனிடையே, வடகிழக்கு ஆபிரிக்க நாடான சூடானில் கடந்த 3 மாதங்களுக்கு மேலாக உள்நாட்டு இராணுவப் பிரிவினருக்க இடையே நடைபெற்றுவரும் சண்டையில் 3,000 ற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ள னர். இந்தச் சண்டை காரணமாக அங்கு தண்ணீர், மின்சாரம், எரிவாயு, உணவு, மருந்து ஆகியவற்றுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்த நிலையில், சூடானில் 2 கோடியே 47 லட்சம் மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படுவதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. இவர்களில் ஒரு கோடியே 90 லட்சம் பேர் உணவு இன்றித் தவிக்கும் நிலைக்குத் தள்ளப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இங்கிலாந்தில் பாகிஸ்தான் மதபோதகர் கைது பயங்கரவாதச் செயல்களைத் தூண்டினாராம்!

பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவாக செயல்பட்டதாக இங்கி லாந்தில் பிறந்த, பாகிஸ்தானைப் பூர்வீகமாகக் கொண்ட இஸ்லாமிய மதபோதகர் அன்ஜீம் சவுதிரியை கிழக்கு லண்டனில் வைத்து பொலி சார் இன்று கைது செய்துள்ளனர்.

லண்டனில் வசித்து வரும் இவர், கடந்த 2022 முதல் இணையத்தின் மூலம் சிறிய குழுக்களுக்கு இங்கி லாந்தில் ஐ.எஸ். பயங்கரவாத அமை ப்பை நிறுவுவது குறித்து ஆலோ சனை வழங்கி வந்துள்ளார் என்று கூறப்படுகிறது.

இஸ்லாமிக் திங்கர்ஸ் சொசைட்டி என்ற தடை செய்யப்பட்ட அமைப்பின் பெயரில் இங்கிலாந்தில் பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவது குறித்துத் திட்டம்தீட்டியுள்ளார் என்றும் இவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அதேபோல் மதபோதகர் அன்ஜீம்



சவுதிரியின் கருத்துக்களை கனடா வில் பரப்பியவரான அவரது கூட்டாளி ஹசன் என்பவரை, கனடாவில் இருந்து விமானம் மூலம் இங்கிலாந்துக்கு வந்தபோது லண்டன் பொலிசார் விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்தனர்.



## அல்ஜீரியாவில் காட்டுத் தீ இதுவரை 25 பேர் உயிரிழப்பு

ஆபிரிக்க நாடான அல்ஜீரியாவில் ஏற்பட்ட திடீர் காட்டுத் தீ காரணமாக 25 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அல்ஜீரியாவின் 16 மாகாணங்களில் நூற்றுக்கும் மேற் பட்ட இடங்களில் காட்டுத் தீ பரவியுள்ளதாகவும், இதனால், வனப் பகுதிகளும் விவசாய நிலங்களும் பெரும் பாதிப்புக் குள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காட்டுத் தீக்குள் சிக்கி 15 பொதுமக்கள் உயிரிழந்துள்ள தாகவும், தீயணைப்புப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இராணுவத்தினரில் 10 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

தீயணைப்புப் பணிகள் தொடர்ந்த வண்ணம் உள்ள நிலையில், பொதுமக்களை பாதுகாப்பாக இருக்குமாறும் அப யகரமான பகுதிகளிலிருந்து வெளியேறுமாறும் அல்ஜீரிய அரசு கேட்டுக்கொண்டுள்ளது. (மி)

## ஹிஜாப் அணியாத பெண் ஊழியர்களின் புகைப்படங்கள் பிரபல இணைய வர்த்தக நிறுவனம் ஈரானில் மூடப்பட்டது




ஈரானில் ஹிஜாப் அணியாத பெண் ஊழியர்க ளின் புகைப்படங்களை பதிவிட்ட டிஜிகாலா என்ற இணைய வர்த்தக நிறுவனத்தை மூட அந்த நாட்டு அரசு உத்தரவிட்டது.

இஸ்லாமிய நாடான ஈரானில் ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனைக் கண்காணிக்க தனி பொலிஸ் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

ஈரானின் அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறியதால், அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளின் அமேசான் போன்ற நிறு வனங்களுடன் ஈரான் மக்களுக்கு பெரியளவில் தொடர்பில்லை.

இதனால், ஈரானின் அமேசான் என்று அறியப் பட்ட டிஜிகாலா இணைய வர்த்தக நிறுவனம் அங்கு மிகவும் பிரபலமடைந்தது. இந்த நிறுவனம் மாதம் ஒன்றுக்கு 4 கோடிக்கும் கூடுதலான வாடிக்கை யாளர்களின் பயன்பாட்டையும், 3 லட்சத்துக்கும் அதிகமான வர்த்தகர்களையும் கொண்டுள்ளது.

இந்த நிலையில், டிஜிகாலா இணைய வர்த்தக நிறுவனம், அதன் அலுவலக நிகழ்ச்சியொன்றில் எடுக்கப்பட்ட, ஹிஜாப் இல்லாமல் பெண் ஊழியர்கள் இருக்கும் புகைப்படங்களை அதன் இணையதளத் தில் வெளியிட்டது. இதையடுத்து, அந்த நிறுவனம் அரசின் விதிகளை மீறியதாகக் கூறி, உடனடியாக நிறுவனத்தை மூடும்படி அரசு உத்தரவிட்டுள்ளது. அத்தோடு, டிஜிகாலா நிறுவனத்தின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் ஈரானிய அரசு தெரிவித்துள்ளது.

## மணிப்பூர் பாலியல் வன்கொடுமை அமெரிக்காவும் கடும் கண்டனம்

மணிப்பூரில் உள்ள ஒரு மாவட்டத்தில் பழங்குடி சமூக பெண்கள் இருவரை ஒரு கும்பல் நிர்வாணப்படுத்தி, சாலையில் இழுத்துச்சென்று கூட்டு பலாத்காரம் செய் துள்ளமை தொடர்பான காணொளி சமூக ஊடகங்க ளில் வெளியாகி, இந்தியா முழுவதும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி யிருந்தது.

மணிப்பூர் வன்முறை தொடர்பாக அமெரிக்க வெளி யுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர் மத்யூ மில்லர் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

மணிப்பூரில் பெண்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறை மிருகத்தனமானது. மிகவும் பயங்கரமா னது. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அமெரிக்கா தனது அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறது. மணிப்பூர் வன்முறைக்கு அமைதியான தீர்வை அமெரிக்கா விரும்புகிறது. அனைத்து மக்களையும், வீடுகள் மற் றும் வழிபாட்டுத் தலங்களையும் பாதுகாக்கும் அதே வேளையில் மனிதாபிமானத் தேவைகளுக்கு பதிலளிக் குமாறு அமெரிக்கா வலியுறுத்துகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# குருந்தூர்மலை ஆதிசிவன் வழிபாட்டுரிமை பாதுகாக்க முன்வாருங்கள் - தென்கயிலை ஆதீன குரு முதல்வர்




குருந்தூர் மலை ஆதி சிவன் கோவிலின் தொன்மம் வழிபாட்டுரிமை பாதுகாக்க அனைவரும் முன்வாருங்கள், என தென்கயிலை ஆதீன குரு முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அண்மைகாலமாக ஆதிசிவன் திருக்கோவில்களின் வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டு சைவத்தமிழ் தொன்மங்கள் பௌத்தசிங்கள தொன்மங்களாக மாற்றியமைக்கப்பட்டு வருவது வடக்கு கிழக்கில் தொடர்கதையாக உள்ளது.

இந்த வகையில் முல்லைத்தீவு குருந்தூர் மலை ஆதி சிவன் திருக்கோவில் வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டு, சிவ வழிபாட்டு தொன்மங்கள் அகற்றப்பட்டு பௌத்த விகாரை நீதிமன்ற கட்டளையை புறந்தள்ளி அமைக்கப்பட்டிருப்பது தமிழ் மக்களை மிகவும் கவலைக்கு உள்ளாக்கி உள்ளது.

கடந்த வாரங்களில் ஆதி சிவன் கோவில் வளாகத்தில் சைவ வழிபாட்டிற்கு நீதிமன்ற கட்டளையும் மீறி தடை ஏற்படுத்தப்பட்டுள்ள அதே நேரம் இந்த வாரம் சட்ட விரோத கட்டுமான இடத்தில் புத்தருடைய சொரூபம் வைக்கப்பட்டிருப்பது அதிர்ச்சி அளிக்கின்றது.

இது இந்த நாட்டின் நீதிமன்ற சுயாதிபத்தை மீண்டும் மீண்டும் கேள்விக்குறியாக்கி உள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எம் சைவ ஆதீனங்களின் அருள் வழிகாட்டிலில் இயங்கும் மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் உண்மையான சைவ சமய அமைப்புக்கள், மேற்படி சைவத்தமிழர்களின் தொன்மங்களை மாற்றியமைக்கும் வழிபாட்டுரிமையை மறுதலிக்கும் மோசமான செயற்பாடுகளை தொடர்ச்சியாக கண்டித்தே வந்துள்ளனர்.

இந்த நிலையில், அரச கட்டமைப்புக்கள் நீதிமன்ற கட்டளைகளை பின்பற்றுவதை மதிப்பதை நாட்டின் அரச தலைவரான கௌரவ சனாதிபதி உறுதிப்படுத்த வேண்டும். அதேபோன்று, தொல்லியல் திணைக்கள விவகாரங்களில் கௌரவ சனாதிபதி வழங்கிய வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும்.

அதே நேரம், நாட்டின் நீடித்த நிலையான சமாதானத்திலும் அபிவிருத்தியிலும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதிலும் பெரும் பங்காற்றும் இந்திய பேரரசு இந்த விவகாரங்களில் தமிழ் மக்களிற்கு, குறிப்பாக எமது ஆதிசிவ வழிபாட்டு மரபுரிமைகளை வழிபாட்டுரிமைகளை பாதுகாக்க இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும்.

முற்றிலும் ஆக்கிரமிப்பு மனநிலையில் பல ஆயிரம் வருடங்களாக சைவத்தமிழ் மக்கள் வசிக்கும் வழிபாடுகளை மேற்கொள்ளும் கடந்த நூற்றாண்டுகளில் சுயாதீன அகழ்வாராய்ச்சி நிபுணர்களால் ஆவுடையார், நந்தி அகழ்ந்து எடுத்து உறுதிப்படுத்தப்பட்ட பண்டைய தமிழ் இராசதானியும் பிரமாண்ட சிவாலயமும் அமைந்திருந்த வன்னி சிவப்பிராந்தியத்தின் முல்லைத்தீலையும் திருகோணமலையும் இணைக்கும் குருந்தூர் மலையில் ஏற்படுத்தப்பட்டுவரும் அமைதியின்மை, மத நல்லிணக்கத்தை ஆழமாக பாதித்து இன விரிசலை மேலும் கூர்மைப்படுத்தும் என்பதை துணைபோகும் அனைவரும் மனங் கொள்ளவேண்டும்

வன்னித் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் இந்த விவகாரத்தில் காத்திரமாக தொடர்ச்சியான பயனுறுதி வாய்ந்ததாக அமைய வேண்டும்.

அனைத்துத் தரப்பினரும் இணைந்து சுமூகமாக ஆக்கிரமிப்பு மனநிலையை கைவிட்டு தமிழ் மக்களின் பூர்வீக நிலப்பரப்பில் வழிபாட்டுரிமைகளை மதித்து, தொன்மங்களை மாற்றியமைக்கும் செயற்பாடுகளை நிறுத்துவதன் மூலம் உண்மையான நல்லிணக்கத்தை நோக்கி பயணிக்க முடியும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம்.

சிவப்பரம்பொருளின் பூரண அருள் நல்லெண்ணங்களை வளர்க்க அனைவருக்கும் கிடைப்பதாகுக - என்றுள்ளது. (O1)

# தமிழகக் கடற்றொழிலாளர்கள் இலங்கை கடற்படையால் கைது



இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி கற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 9 தமிழக கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு அருகே நேற்றைய தினம் இரவு தமிழக கடற்றொழிலாளர்கள் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் 2 படகையும் கைப்பற்றியயதோடு, அதிலிருந்த 9 பேரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை காங்கேசன்துறைக்கு அழைத்துச் சென்று விசாரணைகளுக்கு பின்னர் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (O1)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.07.2023இல் வெளியிடப்பெற்றது.